# NEELANKARAI TIMES

Vol 6 : Issue No. 51 | APRIL 23-29, 2022 | 8 Pages | (YOUR NEIGHBOURHOOD NEWSPAPER) | ADVERTISEMENT : 95513 26655



# Don't get cheated by online fraudsters

Cyber Society of India (CySI), a non-profitable NGO functioning since 2004, has conducted a one-day free Awareness workshop on 16th April, 2022 at Dr.MGR Janaki College of Arts and Science for Women, on the tittle of – "Don't get cheated by online fraudsters "

Dr.Amaresh Pujari, IPS, DGP – Cyber Crime Division was the Chief Guest for the event and delivered the Inaugural Address. The Guest Speakers were Tmt.D.Shanmugapriya, IPS – S.P. Cyber Crime Division, Mr.S.Harikrishnan – G.M.-RBI (Retd.) & Former Vigilance Officer, Mr.S.Murali – Regional Head – TN RCU & Vigilance IDFC FIRST Bank Ltd., Mr.A.J.Attanathi, Mr.L.Muralidharan, Mr.Hameed, Program Head – Newsglitz, Mr.KM Vijayakumar - Vice President CySI, Mr.V.N.Prem Anand- Vice President CySI, and Life Members of CySI - Mr.P.Raman, Mr.B.Kandasamy, Mr.R.Srinivasan, Mr.A.Vinoth Kumar.

Mr.N.Karthikeyan – President CySI gave the Welcome Address, Mr. Balu Swaminathan -Past President CySI gave the Thematic Address, and Mr.V.S.Sooriyan – EC Member CySI delivered the Vote of Thanks. Mrs. Jayashri Sridhar and Mr.K.Kumaran - Joint Secretary CySI compered the sessions.

The Office Bearers of CySI are - Mr.N.Karthikeyan – President, Mr.KM Vijayakumar - Vice President, Mr.V.N.Prem Anand- Vice President, Mr.R.Sridhar -Secretary, Mr.R.Vivekanandan -Joint Secretary, Mr.K.Kumaran, Joint Secretary and Mr.S. Chockalingam -Treasurer. Mr. EC Members and Life Members of CySI, Faculty Members and Students of Dr.MGR Janaki College and Invitees participated and benefitted awareness on topics like jack juicing, SIM swapping, SIM cloning, Scam through QR code scan & remedial measures, frauds using online sales platform, etc. The question & answer session was interactive with a large number of queries raised and doubts clarified. Participant Certificates were issued to the registered participants.

(Contd. on Page 6)












Largest private Lending Library in Chennai

BOOKWORLD LENDING LIBRARY


Join now, you can't resist yourself falling in love with our collections

International Best Selling Authors like Charles Dickens, Miguel de Cervantes, JK Rowling, Dan Brown and 1000+ Authors.

TIME : 10.30 am TO 7.30 PM

KAPALEESWARAR NAGAR, VINAYAGAR TEMPLE, 2ND FLOOR, NEELANKARAI

✆ 80564 81067





டாக்டர் N.R. ஜெயக்குமார்
M.D. (Homoeo), Ph.D

# இதயம் தொட்ட என் சிகிச்சைகள்

சுமார் 31 வருடங்களாக ஹோமியோபதி துறையில் சிறப்பாக மருத்துவ சேவை செய்து வரும் டாக்டர் N.R. ஜெயக்குமார் தான் கண்ட அனுபவங்களை, எப்போதும் மனதை விட்டு அகலாத கேஸ்களை உங்களுடன் பகிர்ந்து கொள்கிறார்.

## எப்போது நிற்கும்?

சமீபத்தில் வயதிற்கு வந்த ஒரு பள்ளி மாணவிக்கு மாதாமாதம் மாதவிலக்கு ஏற்படாமல், முன்னும் பின்னும் மாறுபட்ட நாட்களில் மாதவிலக்கு வருவதும், அப்படியே வந்தாலும் உதிரப்போக்கு நிற்காமல் தொடர்ந்து 30 நாளும் இருந்திருக்கிறது. அந்தப் பெண்ணின் உடல்நிலையைப் பார்த்தால் உடலில் தளர்ச்சி, வெளிரிய தோற்றம் மற்றும் பள்ளிக்கு சைக்கிள் ஓட்டிச் செல்ல முடியாத அளவிற்கு மிகமிக சோர்வுடன் காணப்பட்டாள்.

பல மகப்பேறு மருத்துவர்களிடம் அவரைக் காண்பித்தும் இன்னும் இரத்தப்போக்கு நின்றபாடில்லை என்ற சூழ்நிலையில் ஹோமியோபதியில் ஏதாவது செய்ய முடியுமா ? என்று என்னை அணுகினர். அந்தப் பெண்ணின் Hb அளவை பரிசோதித்துப் பார்த்ததில் 7.6 gm மட்டுமே இருந்தது. (குறிப்பாக இளம் பெண்களுக்கு Hb 14gm% இருக்க வேண்டும். அதற்கு முதற்கட்ட நடவடிக்கையாக Hb அளவைச் சரிசெய்து அதே நேரத்தில் இரத்தப்போக்கையும் நிறுத்த வேண்டும். அதனால் இழந்த இரத்த அணுக்களை மீண்டும் உற்பத்தி செய்யவும், இரத்தம் உறைவதற்குத் தேவையான மூலப்பொருட்களான கால்சியம், மற்றும் பாஸ்பரஸ் உள்ளடக்கிய Ferrumphos 6x Calcphos 6x சத்து மாத்திரைகளையும், இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த மில்லி போலியம் என்ற தாய் திரவத்தை சரியான விகிதத்திலும் கொடுத்தேன். 30 நாட்களாக விடாமல் போய்க் கொண்டிருந்த மாதவிடாயை ஒரு வாரத்திற்குள் முழுமையாக கட்டுப்படுத்த முடிந்தது.

ஆனால் அந்தப் பெண்ணின் பெற்றோருக்கோ இந்த மாதம் இரத்தப்போக்கு நின்று விட்டது, மீண்டும் அடுத்த மாதம் ? என்ற கவலை ஏற்பட்டது.

நான் அதற்கும் சத்து மாத்திரைகளும், இரத்தப் போக்கு அதிகமாகாமல் பார்த்துக் கொள்ள சில மருந்துகளையும் கொடுத்து தொடர்ந்து மூன்று மாதங்கள் சிகிச்சை அளித்தேன். இப்போது அந்தப் பெண்ணுக்கு ஒவ்வொரு மாதமும் சரியான நாட்களில் வருவதோடு, அதிக இரத்தப்போக்கு இல்லாமல் நிற்கவும் ஆரம்பித்து விட்டது.

மாதவிடாய்க் காலங்களில் இரத்தப்போக்கு அதிகமாக இருக்கும் போது Cycling மற்றும் கடின வேலைகள் செய்யக் கூடாது. படுத்தே இருக்க வேண்டும். வயிற்றில் ஈரத்துணியை நனைத்துப் போட்டுப் படுத்துக் கொள்ள வேண்டும். இவை அதிக இரத்தப்போக்கைக் கட்டுப்படுத்த உதவும். மேலும் எள், பப்பாளி, சிக்கன் ஆகியவற்றைச் சாப்பிடுவதைத் தவிர்க்க வேண்டும். உடைத்த கடலை, ஊறவைத்த அவல் போன்றவற்றைச் சாப்பிடுவது நல்லது. இதுபோன்ற ஆலோசனைகளையும் வழங்கி அந்தப் பெண்ணின் மாதவிடாயைச் சரிசெய்வதுடன் Hb அளவையும் மூன்று மாதங்களில் 12 கி அளவுக்கு உயர்த்தினேன்.

madan Homoeo Clinic
Madan Homoeo Clinic
An Ultimate Health Destination

CONSULTANT HOMOEOPATHS
DR. N.R. JAYAKUMAR, Bsc, DHMS, MD (HOOEO), Phd.,
DR. UMA JAYAKUMAR, Msc, (Bio-Chem) BHMS, F.A.N.,

ADAMBAKKAM (MAIN I):
8/1, Ramakrishna Street
(Near Lucky Kalyana Mandapam)
Adambakkam, Chennai - 88.
Phone : 044 - 22453335 / 33
Mobile : 9282113030

NANGANALLUR (MAIN II):
No. 55, 5th Main Road,
(Next to Independence Day Park),
Nanganallur, Chennai - 61.
Phone : 044 - 45585868 / 69
Mobile : 9445428494

BRANCHES:

THIRUVOTTIYUR:
Mobile: 9962513335

OMR-THURAIPAKKAM:
Plot No. 1, Sakthi Nagar Main Road,
Thuraipakkam, Chennai-600 097
Phone : 044-43183336, Mob : 9677093336
Timings: 9.00am - 1.00 pm | 4.00 pm - 8.30pm
Sunday: 9.00am - 1.00 pm | 3rd Sunday Holiday

# Don't get cheated....

(Contd. from Page 5)

Delivering the Inaugural Address, Mr. Amaraesh Pujari, Director General of Police, Cyber Crime Division, Chennai provided an overview of the extent of loss inflicted due to cyber-crime in our country and pointed out that more than Rs. 12 crores is lost with damages suffered by more than 80 websites every day in India. He reiterated the current facility for recovering the loss due to cyber frauds wherein there is an assured possibility to recover the lost money if the victims can dial 1930 within 5 minutes of the occurrence. He also stressed the need for strengthening the laws relating to cyber-crimes and urged the government to take the needful policy decision towards that end. As a useful tip for the clients, he suggested to the banks to send free SMS alerting on the existence of the 1930 free dialling facility which can a prove a boon for those falling victims to cyber frauds. Mr. Amaraesh Pujari also recommended to the government to consider including lessons in schools which can bring about awareness on cyber-crimes as a means for safeguarding the future generation from cyber fraudsters. Tmt. D. Shanmuga Priya IPS, Superintendent of Police, Cyber Crimes spoke on prevention and detection of online fraudsters by Cyber Crime Division and Mr Karthikeyan, Cyber Advocate spoke on the laws relating to cyber-crimes.

# மழைநீர் வடிகால்களில் கழிவுநீரை வெளியேற்றுபவர்கள் குறித்து புகார் அளிக்கலாம்

## சென்னை மாநகராட்சி அறிவிப்பு

மழைநீர் வடிகால்களில் கழிவுநீரை வெளியேற்றும் நபர்கள் குறித்து பொதுமக்கள் 1913 எண்ணில் புகார் அளிக்கலாம் என்று சென்னை மாநகராட்சி அறிவித்துள்ளது.

இதுகுறித்து, சென்னை மாநகராட்சி வெளியிட்ட அறிக்கை:

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் மழைநீர் வடிகால் துறையின் மூலம் 2,071 கி.மீ. நீளமுள்ள 8,835 மழைநீர் வடிகால் கட்டமைப்புகள் பராமரிக்கப்பட்டு வருகிறது.

இதில் மழைநீர் தங்குதடையின்றி செல்லும் வகையில் தூர்வாரப்பட்டு, பழுதடைந்த மழைநீர் வடிகால்கள் புனரமைக்கப்பட்டு தொடர்ந்து பராமரிக்கப்பட்டு வருகிறது.

இது மழைநீர் தங்குதடையின்றி செல்வதற்கு மட்டுமே அமைக் கப்பட்டுள்ளது. ஆனால், ஒரு சில இடங்களில் சட்ட விரோதமாக கழிவுநீர் இணைப்புகள் இணைக்கப்பட்டுள்ளன. இதனால் மழைநீர் செல்வது தடைபட்டு நீர்த்தேக்கம் ஏற்படுகிறது. எனவே, மழைநீர் வடிகால்களில் சட்ட விரோதமாக கழிவுநீரை வெளியேற்றும் குடியிருப்புகளுக்கு ரூ.5,000 அபராதமும், நிறுவனங்களுக்கு ரூ.25,000 அபராதமும் விதிக்கப் பட்டு வருகிறது.

அதனடிப்படையில் கடந்த 4ம் தேதி முதல் 19ம் தேதி வரை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள குடியிருப்புகள் மற்றும் நிறுவனங்களில் மேற் கொள்ளப்பட்ட களஆய்வுகளில் 105 சட்ட விரோத கழிவுநீர் இணைப்புகள் கண்டறியப்பட்டு அவற்றின் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு ரூ.74,500 அபராதம் வசூலிக்கப்பட்டுள்ளது. எனவே, பொதுமக்கள் மழைநீர் வடிகால்களில் கழிவுநீரை வெளியேற்றுவதை தவிர்க்க வேண்டும். மீறினால் கழிவுநீர் இணைப்புகள் துண்டிக்கப்பட்டு அபராதம் விதிக்கப்படும். மேலும், மழைநீர் வடிகால்களில் கழிவுநீரை வெளியேற்றும் நபர்கள் குறித்து பொதுமக்கள் மாநகராட்சியின் 1913 என்ற எண்ணில் புகார் தெரிவிக்கலாம்.

# தெருக்களின் பெயர் பலகைகள் மீது போஸ்டர் ஒட்டினால் குற்றவியல் நடவடிக்கை!

## சென்னை மாநகராட்சி எச்சரிக்கை.!

தெருக்களின் பெயர் பலகைகளில் போஸ்டர்கள் ஒட்டுபவர்கள் மீது குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என சென்னை மாநகராட்சி எச்சரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பாக சென்னை மாநகராட்சி வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,

பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதி களில் தூய்மையை பராமரிக்கும் வகையில் மாநகராட்சியின் சார்பில் திடக்கழிவுகளை அகற்றுதல், சாலை மையத் தடுப்புகளில் செடிகள் நடுதல், பாலங்களில் செங்குத்துப் பூங்காக்கள் அமைத்தல் போன்ற அழகுப்படுத்தும் பணிகளும் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேலும், அரசு, மாநகராட்சி கட்டடங்கள், பேருந்து நிறுத்த நிழற்குடைகள், பாலங்கள் உட்பட பொது இடங்களில் ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் அகற்றப்பட்டு வண்ண ஓவியங்களால் அழகுப்படுத்தப்பட்டு வருகின்றன.

பெருநகர சென்னை மாநகராட்சியின் சார்பில் அனைத்து தெருக்கள் மற் றும் சாலைகளிலும் பெயர் பலகைகள் அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது.

ஏற்கனவே அமைக்கப்பட்டுள்ள தெருக்களின் பெயர் பலகைகள் மற்றும் இனி அமைக்கப்பட உள்ள பெயர் பலகைகளில் சுவரொட்டிகள் மற்றும் இதர விளம்பரங்களை மேற்கொள்ளும் நபர்கள் மற்றும் நிறுவனங்களின் மீது தமிழ்நாடு திறந்தவெளி இடங்கள் பாதுகாப்பு சட்டம் 1959ன் படி (Tamilnadu Open Places (Prevention of Disfigurement) Act, 1959) காவல் நிலையங்களில் புகார் அளித்து சிறை தண்டனை மற்றும் அபராதம் விதிக்க நடவடிக்கை மேற்கொள்ளப்படும்.

எனவே, பொதுமக்கள் மாநகராட்சியின் இந்த நடவடிக்கைகளுக்கு தங்களின் முழு ஒத்துழைப்பை வழங்கி சென்னை மாநகரை சுத்தமாகவும், அழகாகவும் பராமரிக்கும் வகையில் பொது இடங்கள் மற்றும் தெருக்களின் பெயர் பலகைகளில் சுவரொட்டிகள் மற்றும் விளம்பரங்கள் செய்வதை தவிர்க்க வேண்டும் என எச்சரிக்கை விடுத்துள்ளது.

**மரங்களை நடுவோம். இயற்கையை காப்போம்,**